# பிறந்தநாள் வாழ்த்துக்கள்!

05-06-2020



மண்ணகம் போற்று மின்ப
    மருவிலாப் பெருமை தன்னை;
கண்ணுறும் காட்சியோடும்
    கரையிலாக் கல்வி யோடும்,
கண்ணியம் மிக்க அறிவால்
    கனிவுடன் அடையப் பெற்று,
எண்ணிய கீர்த்தி யாவும்
    இயல்பினால் அடைந்து ஏகி,

தொன்னூறும் தொகை நூறாய்,
    தொகுத்த வழியில் நின்று;
நன்னிய நலங்கள் தன்னை,
    நானிலம் போற்றச் செய்து,
மன்னிய அறங்கள் காத்து,
    மாநிலம் போற்ற வாழ்க!
இன்னிய நாளாம் இதனில்
    இதயம் கனிந்த வாழ்த்து!

- வேறு –

அகவையோ பதினெட் டென்று,
    ஆன்றநல் காலம் கூறும்!
இகத்தினில் கொள்ளும் கல்வி,
    இயன்நிலை பகர்தல் வேண்டும்!
திகழுமோர் பெருமை யாவும்,
    திரண்டிட வேண்டும் என்றும்!
அகம்நிறைந்த வாழ்த்து தானே,
    அன்புடன் **சக்தி**யம்மாவுக்கே!

- அன்புடன்,

பெரியப்பா, பெரியம்மா, அண்ணன்கள், அண்ணியார்,
இவர்களுடன், பாட்டியும், யாழினியும்.